REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலக்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

தி. மு. க. பெற்றுள்ள வெற்றி

(15—3—57 நண்பகல்வரை)

★

சட்டசபை:	மக்கள் சபை:
7	3 (2 ஆதரவாளர்கள்)

(பெற்றுள்ள மொத்த வாக்குகள்)

சட்டசபை:	மக்கள் சபை:
11,08,645	7,18,632

மலர் 4] சென்னை: பங்குனி 2உ வெள்ளி (15—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 3உ சனி (16—3—57) [இதழ் 237

மாநிலங்களின் 'சுதந்திர எழுச்சி'யை ஒடுக்க!

டாக்டர் சுகர்ணே சர்வாதிகாரி ஆகிறர்!

இந்தோனேஷியாவில் கொந்தளிப்பு

போர் நிலைப் பிரகடனம்: மந்திரிசபை இராஜினமா

ஜகார்தா, மார்ச் 14—

ஜகார்தா மத்திய சர்க்காருக்கு எதிராக மாநிலங்கள் பலவும் கிளர்ந்தெழுந்ததின் விளைவாக, இந்தோனேஷியா முழுவதிலும் போர் நிலையைப் பிரகடனம் செய்துள்ளார், குடியரசுத் தலைவரான டாக்டர் சுகர்ணே!

மேலும், குடியரசுத் தலைவர் என்ற முறையில் அவரே இராணுவத்தின் தலைமைத் தளபதி ஆதலால், சர்வ அதிகாரங்களையும் தாமே மேற்கோண்டிருக்கிறர்.

டாக்டர் அலிசஸ் தரோமிஜோஜோவின் சர்க்கார், தனது இராஜினாமாவைத் தந்துவிட்டது.

நாலரை மணி நேர விவாதத்திற்குப் பிறகு மந்திரி சபை இராஜினமாச் செய்வது என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

புதியதோர் மந்திரி சபை சீக்கிரமே அமையுமாம்.

அடுத்த பிரதமர் யார்?

கடந்த டிசம்பர் திங்களில் குடியரசுத் துணைத் தலைவர் பதவியை இராஜினமாச் செய்த டாக்டர் முகம்மது ஹட்டா, 'எதிர்க்கட்சியே இல்லாத ஒரு அரசாங்கம் வேண்டும்' என்ற திட்டத்தை வன்மையாகக் கண்டித்து வந்திருக்கிறர். அவரைப் பிரதமராகக்கொண்டு அமையும் சர்க்கார் தங்களுக்குப் பிடித்தமானதே என்று பல மாநிலத் தலைவர்கள் கூறியிருக்கின்றனராம்.

இந்தோனேஷியாவின் பிரதான முஸ்லீம் கட்சியான மஸ்ஜூமி கட்சி, மந்திரி சபையில் கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக் கொள்வதை எதிர்க்கிறது. அத்துடன், டாக்டர் ஹட்டாவே புதிய மந்திரி சபையின் தலைவராயிருக்கவேண்டும் என்றும் கோரியுள்ளது.

புதிய மந்திரி சபை அமையும் வரையில் அலி மந்திரி சபையே பதவி வகிக்க வேண்டும் என்று, சுகர்ணே கேட்டுக்கொண்டிருக்கிறர் எனவும் கூறப்படுகிறது.

இந்தோனேஷிய மத்திய சர்க்காரின் அதிகாரம் ஜாவா தீவு வரைக்கும்தான் செல்லும் என்னும் அளவுக்கு அந்த சர்க்காரின் அதிகார வரம்பு குறுகிவிட்டிருக்கிறது!

இந்தோனேஷியா, போர்னியோ, சுமத்திராவின் பெரும்பாலான பகுதிகள், செலிபா, மல்லூகஸ், சுந்தா தீவுகள் ஆகிய பகுதிகளெல்லாம் அந்தந்தப் பகுதி இராணுவ அதிகாரிகளின் கையில் சிக்கிவிட்டிருக்கின்றன.

ஜகார்தா சர்க்கார், ஜாவாவிற்கு வெளியேயுள்ள மற்றப் பகுதிகளைப் புறக்கணித்து வருவதாக அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் தலைவர்களெல்லாம் குற்றச்சாட்டி, டாக்டர் அலி சஸ்திரோமித் ஜோஜோ சர்க்காருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ளது தெரிந்ததே.

இந்தோனேஷியாவின் மொத்த மக்கள் தொகையான 8 கோடியில் 60 சதவிகிதம் பேர் ஜாவாவிலேயே குடியிருந்தபோதிலும்கூட, சுமார் 3,000-த்திற்கும் அதிகமான தீவுகளைக்கொண்ட இந்தோனேஷியாவின் மொத்த நிலப்பரப்பில் 10 சதவிகிதமே கொண்டதுதான் ஜாவா என்றும் இந்தோனேஷியாவின் வெளிநாட்டு வர்த்தகத் துறைகளுள் 80 சதவிகிதமும் ஜாவாவுக்கு வெளியேதான் நடைபெற்று வருகின்றன என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

19 வயது நிரம்பிய விடுதலைப் போர் வீரனுக்குத் தூக்கு!

சைப்ரசில் வெள்ளையர் புரியும் கொடுமை

நாடெங்கிலும் வேலைநிறுத்தம்

நிகோசா, மார்ச் 14—

ஒரு துப்பாக்கி வைத்திருந்தான் என்று குற்றம்சாட்டி சைப்ரஸ் இளைஞன் ஒருவனை—19 வயது மட்டுமே நிரம்பிய வீரவாலிபனை வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்கள், நிகோசியா சிறை ஒன்றில் தூக்கில் தொங்கவிட்டு கொடுமை புரிந்திருக்கின்றனர்.

இந்த அநியாயத்தைக் கண்டிக்கும் வகையில் சைப்ரஸ் முழுவதிலும் முக்கியமான நகரங்களில் எல்லாம் மகத்தான வேலைநிறுத்தம் நடத்தி கண்டனம் முழக்கியிருக்கின்றனர், சைப்ரஸ் மக்கள்!

பள்ளிகள், கடைகள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

ஆப்பிரிக்கர்களை நண்பர்களாகக் கருதிய குற்றத்திற்காக!

அமெரிக்கப் பெண்மணியை நாடு கடத்தும் கொடுமை

தென்னுப்பிரிக்க வெள்ளையரின் நிறத்துவேஷம் உச்சம் பெறுகிறது

ஆப்பிரிக்கர்களுடன் நட்புறவுடன் இருந்தார்; அவர்களிடம் அனுதாபம் காட்டினர்; அவர்களுக்கு உதவி செய்தார் என்பதற்காக, ஒரு அமெரிக்கப் பெண்மணியை தென்னுப்பிரிக்க சர்க்கார் நாடு கடத்தி உத்திரவு பிறப்பித்திருக்கிறதாம்.

இதன் மூலம் தே. ஆ. சர்க்கார், ஆப்பிரிக்கர்மீது கொண்டுள்ள துவேஷத்தின் அளவைக் கணக்கிட முடிகிறதல்லவா?

1955-ல் ஹூப்பர் என்ற அந்தப் பெண்மணி, ஆப்பிரிக்காவைச் சுற்றிப்பார்க்கவே வந்தார். பின்னர் 1956-ல், மீண்டும் அமெரிக்கா சென்றுவிட்டு அங்கிருந்து ஆப்பிரிக்காவில் நிரந்தரமாகத் தங்குவதென முடிவு செய்து வந்தார்.

அங்கு வந்தபின், வீடு ஒன்றையும் வாங்கிக்கொண்டு குடியேறியவரை இப்போது தெ. ஆ. சர்க்காரின் உள்நாட்டிலாகா மந்திரி ஒருவர் கைது செய்து காவலில் வைத்துள்ளாராம். அவரை நாடு கடத்துமாறும் உத்தரவிட்டிருக்கிறராம்.

"நான் செய்த குற்றம்தான் என்ன? நேட்டாலிலும் டிரான்ஸ்வாலிலும் நான் ஆப்பிரிக்கர்களுடன் நட்புறவுகொண்டேன்; அவர்களோடு பழகினேன்; அவர்களிடம் அனுதாபம் காட்டினேன்; இதுதான் நாடு கடத்தப்படுவதற்குரிய அத்தனை பெரும் குற்றமா?" என்று, அந்த அமெரிக்கப் பெண்மணி வருந்துகிறராம்.

★★★★★★★★★★★★★★★★★★★

ஆபிரகாம் லிங்கன் பிறந்த நாட்டில்!

நீக்ரோ மாணவர் வெள்ளையரால் தாக்கப்பட்டு கோர மரணம்

சிகாகோ, மார்ச் 14—

ஒரு நீக்ரோ மாணவர், இங்கு சில வெள்ளைய இனவெறிகொண்ட மாணவர்களால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கிறர்.

ஆல்வின் பால்மர் என்ற அந்த 17 வயதான நீக்ரோ மாணவரை திங்களன்று மாலை பஸ் ஒன்றுக்காகக் காத்திருந்த எட்டு வெள்ளை இன மாணவர்கள் சுற்றிலும் சூழ்ந்துகொண்டு ஏதும் பேசாமல் திடீரென பயங்கரமான தாக்குதலில் ஈடுபட்டு, பால்மரைச் சாகடித்தனராம்!

'சதி ஏதும் இல்லை'

ஆச்சாரியார் சந்திப்பு பற்றி அண்ணு

"ஆச்சாரியாரைச் சந்தித்துப் பேசியதில் எந்தவித சதியும் நிச்சயம் இல்லை; அந்தச் சந்திப்பிற்காக, 'உள்நோக்கம்' கற்பித்துப் பேசுவது தவருனதாகும்"

என்று, அண்ணு அவர்கள், சேலம் நகரில் கடந்த 12-ந் தேதியன்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறர்.

★★★★★★★★★★★★★★★★★★★

வெற்றிப் பாதையில் ஈ. வெ. கி. சம்பத்!

கரூர், மார்ச் 15—

நாமக்கல் பாராளுமன்றத் தொகுதியில் கழக அபேட்சகராகப் போட்டியிடும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு, நேற்று இரவுவரை எண்ணப்பட்டு முடிந்த வாக்குகள் எண்ணிக்கைப்படி 17,312 வாக்குகள் அதிகமாக இருந்துவருகிறது.

இதுவரையிலும் ஆத்தூர், நாமக்கல், இராசிபுரம், சேந்தமங்கலம், அரவக்குறிச்சி ஆகிய தொகுதிகளில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டுவிட்டன. இவற்றில், தோழர் சம்பத் அவர்களுக்கு 1,23,528 வாக்குகளும், காங்கிரஸ் அபேட்சகருக்கு 1,06,216 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன. மற்றும் இரு சுயேச்சைகளில் கேசவலால் காளிதாஸ்சேட் என்பாருக்கு 33,375 வாக்குகளும், பரமசிவன் என்பாருக்கு 24,799 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

இன்னும் சென்னிமலை, காங்கேயம், ஈரோடு ஆகிய 3 தொகுதிகளில் மட்டுமே வாக்குகள் எண்ணப்பட வேண்டியிருக்கின்றன.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள்தான் வெற்றிப் பாதையிலிருக்கிறர்.

சத்தியவாணிமுத்துவின் தொகுதி:

வாக்கு எண்ணிக்கை நிலவரம்

சென்னை, மார்ச் 15—

சென்னை பெரம்பூர் தொகுதியில் பதிவான வாக்குகள் நேற்றுமுதல் எண்ணப்பட்டு வருகின்றன. தனித் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகராகப் போட்டியிட்ட தோழியர் சத்தியவாணி-முத்து அவர்கள்தான் மற்ற இரு அபேட்சகர்களையும்விட அதிகம் வாக்குப் பெற்றுள்ளார், எண்ணிய வரையில்!

பகல் 11 மணிக்குக் கிடைத்த தகவல்களின்படி திருமதி சத்தியவாணிமுத்து (தி.மு.க.) 15,941; இராஜகோபால் (காங்.) 12,504; சாமுண்டீஸ்வரன் (சோஷ.) 10,334; கருப்பண்ணன் (கம்.) 2,241 வாக்குகள் பெற்றிருக்கின்றனர்.

ஹங்கேரியாக்கமாட்டார்களாம்!

மான்கோர, மார்ச் 13—

"கிழக்கு ஜெர்மனியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ரஷ்யத் துருப்புகள், ஜெர்மனியின் உள்நாட்டு சமூக அரசியல் விவகாரங்களில் தலையிடாது" என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

நம் நாடு
திமுகவின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 15—3—57 வெள்ளி

எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்?

60 கோடி சீன மக்களின் ஆதரவைப்பெற்ற பிகிங் சர்க்கார்தான், சீனவின் உண்மையான சர்க்கார் என அங்கீகரிக்க மறுப்பதின் மூலம் அமெரிக்கா தனது பேதமைக்குச் சிலை வடிப்பதைப்பற்றி யாருக்கும் கவலை இல்லை.

பார்மோசா தீவிற்குத் துரத்தப்பட்டு சப்தநாடியும் ஒடுங்கிப்போய் தனது பீரங்கிகளின் பாதுகாப்பிலும் டாலர் எனும் மஞ்சள் பூதத்தின் தயவிலும் உயிர் வாழ்ந்துவரும் சியாங் கும்பல்தான், சீனவின் உண்மையான சர்க்கார் என்று அமெரிக்கா பிதற்றிக் கொண்டிருப்பதைப் பற்றியும் யாருக்கும் அக்கரையில்லை.

ஆனல், அமெரிக்கா அங்கீகரிக்கவில்லையானல், உண்மையான சீன சர்க்கார், உலக மக்களின் பாதுகாப்பிற்காக அமைந்துள்ள ஐ. நா. சபையில் தனக்குள்ள பிரதிநிதித்துவத்தைப் பெறமுடியாது என்ற நிலையை யாரும் சகித்துக்கொள்ள முடியாது.

சியாங் கும்பலை எத்தனை டல்லசுகள் வேண்டுமானலும் தலைமேல் தூக்கிவைத்துக்கொண்டு கூத்தாடினலும் அந்தப் 'பிறமி'கள், சீன மக்களின் பிரதிநிதிகளாகிவிட முடியாது; அல்லது, டல்லசுகள் அங்கீகரிக்க மறுப்பதாலேயே பிகிங் சர்க்கார்தான் உண்மையான சீன சர்க்கார் என்ற நிலையும் மாறிவிடாது. இந்த உண்மை, உலகில் உள்ள விவரமறியாத 'அப்பாவி'க்குக்கூடத் தெரிந்துள்ள ஒன்றுதான்; என்றாலும் டல்லஸ், 'சீட்டோ' கூட்டத்தில் செஞ்சீன மக்களுக்கு ஆத்திரமூட்டக்கூடிய வகையில் சீனபற்றி விமரிசனம் செய்திருக்கிறரே, அந்தத் துணிவு, அவருக்கு எங்கிருந்து பிறக்கிறது?

ஐ. நா.-வில் செஞ்சீனவை அனுமதிக்க முடியாது என்ற டல்லசின் அகம்பாவப் பேச்சு, ஐ. நா. அமைப்பின் புனித நோக்கங்களைக் கேலிக்குரிய தாக்குகின்றது; ஐ. நா. சாசனத்தின் தூய கோட்பாடுகளைச் சவாலுக்கு அழைத்துச் சிறுமைப்படுத்துகிறது.

ஐ. நா. என்பது, அமெரிக்காவின் சொந்த ஆசை, அபிலாசைகளை சர்வதேச ரீதியில் நிறைவேற்றிக்கொள்ள உதவும் ஒரு சாதனம் என்றே டல்லஸ் கருதுகிறர் என்பதை, அவரது சீனபற்றிய விமர்சனம் ஒளிவு மறைவின்றிக் கூறுகிறது.

இது ஐ. நா.-வில் இடம்பெற்றிருக்கும் ஒவ்வொரு சுதந்திர நாட்டினுடையவும் தன்மானத்திற்குத் தரப்படும் அறைகூவல் அல்லவா?

அமெரிக்காவின் பீரங்கிகளும் டாலர் பூதத்தின் பேயுருவமும்தான் தங்களுக்குப் பாதுகாப்புத் தரும் என்று ஐரோப்பிய அமெரிக்கக் கண்டங்களில் உள்ள சில சின்னஞ்சிறு நாடுகள் இருக்கின்றனவே போலும். அவை அமெரிக்காவிடமிருந்து பெறும் இராணுவ, டாலர் உதவிகளுக்காகத் தங்களின் விலைமதிப்பில்லாத சுதந்திரத்தையே பண்டமாற்றுச் செய்துவிட்டனவா என்பதும் தெரியவில்லை. அமெரிக்கா போன்ற பெரிய வல்லரசுகளின் துணையினல்தான் தாங்கள் பாதுகாப்போடு வாழ முடியும் என்று அந்த நாடுகள் நினைப்பதானல், அதைவிட அறியாமை வேறு இருக்க முடியாது என்பதுடன் அந்த நினைப்பே தங்களின் சுதந்திர உரிமைகளுக்கு இழிவு தேடித் தருவதாகும் என்பதையும் அவை உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. அல்லது அமெரிக்காவின் இராட்சச பலத்தைக் கண்டு அவை நடுங்குகின்றனவா என்பதையும் தெளிவாக்க மறுக்கின்றன.

இந்த நாடுகளின் பயங்கொள்ளித்தனம், அவற்றை அமெரிக்கா இயக்கும் கைகாட்டி மரங்களாக்கி வைத்திருக்கின்றது. இந்தக் 'கைகாட்டி' மரங்களின் 'துணை'யை நம்பித்தான், 'ஐ. நா., அமெரிக்காவின் சொந்தச் சொத்து' என்ற பொருள்படப் பேசுகிறர் டல்லஸ்.

அமெரிக்காவிற்கு இனி, சீன பற்றிய நியாயங்களை எடுத்துரைப்பது, கல்லில் நார் உரிக்கும் வேலையாகத்தான் இருக்கும் என்பதால் அமெரிக்காவின் கைப்பொம்மைகளாய்—அமெரிக்க டாலர் ஒளியில் நின்று பிரகாசம் பெற விரும்புபவைகளாய் உள்ள நாடுகளுக்குத்தான் இந்த நியாயங்களை வலியுறுத்திச் சொல்லவேண்டியுள்ளது.

அமெரிக்கா, செஞ்சீனவை ஐ. நா.-வில் நுழையவிடாது தடுக்க நினைப்பது, டல்லஸ் கூறுவதுபோல உலக சமாதானத்தைப் பாதுகாக்கவோ, நியாயங்களை நிலைநாட்டவோ அல்ல; மாறாக, தனது சொந்த ஆதிக்கத்திற்கு உறுதி கூட்டுவதற்காகத்தான் என்பதை, அமெரிக்காவின் தயவில் வாழ நினைக்கும் ஐரோப்பிய நாடுகள் விரைவில் உணர்ந்தாக வேண்டும்.

மேலும், எந்த ஒரு உலக நெருக்கடி இனி தோன்றினும், அந்த நெருக்கடிக்குத் தீர்வு காண முன்போல, கீழ்த்திசை நாடுகளை—அவற்றின் கருத்துக்களை அலட்சியம் செய்துவிட முடியாது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

அமெரிக்கா ஆட்டுவிக்கிறபடி—அல்லது எந்த ஒரு வல்லரசும் ஆட்டுவிக்கிறபடி ஆடிக்கிடக்கும் நாடுகள், நீண்ட நெடிய எதிர்காலத்தில் தோன்றக்கூடிய ஆழமான விளைவுகளைக்கொண்ட மாறுதல்களைச் சிந்தித்து உணரும் தூரப்பார்வை பெற்றிருப்பவையானல், அந்தப் பார்வையில் செஞ்சீனவுக்கு ஐ. நா.-வில் இடமளிக்க மறுப்பது போன்ற அநியாயங்களுக்கு எதிராக இந்தத் திசையில் ஒருமுகமாகத் திரண்டு விசுவரூபம் எடுக்கக்கூடிய ஆன்மிக பலத்திற்கு எதிராக அமெரிக்கா அல்லது வேறெந்த வல்லரசினுடையவோ இராட்சசத் தன்மையான அசுரபலம் அத்தனையும் ஒன்று சேர்ந்தாலும், ஒருசில விநாடிகள்கூட நிற்க முடியாது என்ற உண்மை படாமற் போகாது.

அநியாயங்களுக்குத் துணை போவது பாதுகாப்பைத் தராது என்பதை மட்டுமல்ல—ஆபத்தையும் தேடித் தரும் என்பதை, உண்மையைப் பார்க்கவே மறுக்கிற அகம்பாவம் கொண்ட டல்லசுகளுக்கல்ல—வல்லரசுகளின் நிழலில் நிற்கும் சுதந்திர நாடுகளுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த உலகினில்?

சரித்திரத்தின் 'எல்லைக் கோட்டை' மாற்ற முயன்ற ஏகாதிபத்தியங்கள்!

முழு தோல்வி பெற்றதாகக் குறிப்பு

மாஸ்கோ, மார்ச் 13—

"மத்தியக் கிழக்கிலும் மத்திய ஆசியாவிலும் இழந்துவிட்ட தங்கள் ஆதிபத்திய நிலைமையை மீண்டும் நிலைநாட்டிக்கொள்ள வேண்டும் என்ற நினைப்புடன் காலனி ஏகாதிபத்தியவாதிகள் தருகின்ற தொல்லைகள்தான், ஐ. நா. பாதுகாப்புச் சபையில், காஷ்மீர் விவகாரம் பொறுத்த வரையில் அங்கு தெரிவிக்கப்பட்ட முடிவுகள் என்பது அம்முடிவுகள் பற்றியப் பரிசீலனையின்போது தெளிவாகிறது,"

என்று, சோவியத் இதழான 'பிராவ்தா'வில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

அதே நேரத்தில், 'ஏகாதிபத்தியத்தைப் பூண்டோடு அழிப்பதில் இந்த நாடுகள் இன்னும் அதிகமான வெற்றி பெற்றுள்ளன என்பதும் இதன்மூலம் தெரிய வருகிறது' என்றும் அவ்விதழ் குறிப்பிட்டிருக்கிறதாம்.

ஒரு சோவியத் எழுத்தாளர், காஷ்மீர் பிரச்சினை குறித்து எழுதியுள்ள அக்கட்டுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து எழுதியிருப்பதாவது:—

"தங்கள் தங்கள் அரசியல் முன்னேற்றத்தைக் கருதி, சுதந்திரப் பாதையை நோக்கித் தீவிரமாக நடைபோட்டுவரும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் உரிமை 'அகில உலகப் பிணைப்பு' என்ற பெயரால் மிகமிகத் தீவிரமாக எதிர்க்கப்பட்டுவருகிறது. சரித்திரத்தின் கடைக்காலையே மாற்றிவிட வேண்டுமென்ற முயற்சியில் முழுத் தோல்வியைக் கண்டுவிட்ட ஏகாதிபத்தியவாதிகள், இப்போது ஆயுத பரிகாரணங்களுடன் தாக்குதல் நடவடிக்கைகளிலும் மற்றும் பல இழிமுறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்"

இராஜஸ்தான் மாநில அமைச்சர் படுதோல்வி

ஜெய்ப்பூர், மார்ச் 13—

இராஜஸ்தான் மாநில சர்க்காரிலுள்ள ஒரு துணை அமைச்சரான திருமதி கமலா பினிவால் என்பார் இராம் இராஜ்யப் பரிஷத் அபேட்சகரால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறர்.

டுடு என்ற இரட்டை உறுப்பினர் தொகுதியில் பொதுத் தொகுதியில் மேற்கண்ட அமைச்சரை தோற்கடித்ததுமட்டுமல்லாமல் தனித் தொகுதியிலும் இராஜ்ய பரிஷத் கட்சி அபேட்சகரை நிறுத்தி காங்கிரசை வெற்றி கண்டிருக்கிறது.

'பலருடனும் நட்புறவு கொள்ள குடியரசு நாடாக வேண்டும்'

இலங்கை மந்திரி கருத்து

ஆக்ரா, (கஹ), மார்ச் 13—

இலங்கை, காமன்வெல்த்திற்குட்பட்ட ஒரு குடியரசாக சீக்கிரமே பிரகடனப்படுத்தப்படும்!

இந்தத் தகவலை இலங்கையின் உள்நாட்டிலாகா மந்திரி ஜெயசூரியா இங்கு வெளியிட்டுள்ளார்.

"இப்படிச் செய்வதுதான் உலகில் உள்ள எந்த ஒரு நாட்டுடனும் இலங்கை நட்புறவு கொள்ள சுதந்திரமுடையதாக இருக்கமுடியும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

"எங்கள் நோக்கம், உலகில் உள்ள எல்லா நாடுகளுடனும் நட்புறவுகொள்ள வேண்டுமென்பதாகும்; ஆனல், ஒரு டொமினியனுக இருந்துகொண்டு இந்த நோக்கத்தை ஈடேற்றிக்கொள்ள முடியாது" என்றும் அவர் கூறியுள்ளார்.

இரண்டாகப்பிளந்தவியட்நாமை ஒன்றுபடுத்த தேர்தல் நடத்தாதது ஏன்?

நாடு பிரிந்திருப்பதற்கு ரஷ்யாவின் ஆசி கிடைத்துவிட்டதா?

சைகோன், மார்ச் 13—

வட வியட்நாம் குடியரசுத் தலைவர், காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளாரா?

கடந்த சில காலமாக 'ஆம்' என்று விடை கூறப்பட்டுவந்தாலும், அது உண்மையென நிரூபிக்கப்படவில்லை.

அண்மையில் அவரைப் பேட்டி கண்ட பிரிட்டிஷ் பத்திரிகை நிருபர் ஒருவர், ஹோ-சி-மின் உற்சாகத்தோடு காணப்பட்டாலும் அவரது முகம் வெளுத்திருப்பதாகக் கூறியிருந்தார்.

இதே நிருபர், ஹோ-சி-மின்னை பல விருந்து வைபவங்களில் கண்டபோது, அவரது வழவழப்பான கன்னத்தில் இரண்டு பெரிய செம்புள்ளிகள் இருப்பதாகக் கண்டதாகவும் கூறினராம்; இது அபத்தமெனச் சிலர் கூறினலும் சிலர் ஆச்சரியப்பட்டனராம்.

என்ன காரணம்?

சமீபகாலமாக அவர், அரசாங்க அலுவல்களை, தானே கவனிப்பதில்லையாம்; இதரர்களை விட்டு கவனிக்கச் சொல்கிறாராம். இதற்குக் காரணம், அவரது உடல்நலக் குறைவா? அல்லது வட வியட்நாம் நிலச் சீர்திருத்த கொள்கையில் சர்க்காரின் தவறுகளுக்கு பிறரைப் பொறுப்பாளியாக்கிவிட்டு, தான் நல்லபெயரெடுக்க விரும்புகிறரா என்பதும் தெரியவில்லை என்று சிலர் கூறுகின்றனர்.

ஒத்திவைப்பிற்கு சம்மதித்தது ஏன்?

வடக்கு—தெற்கு வியட்நாம்களை ஒன்றுபடுத்துவதற்கு 1956-ம் ஆண்டு ஜூலைத் திங்களிலேயே பொதுத் தேர்தல் நடத்த வேண்டுமென்றிருந்தது; ஆனல், அதை கால வரையறையின்றி ஒத்திவைப்பது என்ற தென் வியட்நாமின் முடிவுக்கு ஹோ-சி-மின் சர்க்கார் ஒப்புதல் அளித்தது ஏன்? இந்த ஜினீவா ஒப்பந்தத்திற்கு விரோதமான போக்கிற்கு ரஷ்யாவின் ஆசியும் கிடைத்திருக்கிறது. இவை வியட்மின் கொள்கைகளின் பலவீனத்தைக் காட்டுகின்றனவா என்று பலருக்குச் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளனவாம்.

பள்ளிப் பாடப் புத்தகங்கள்

இனி சர்க்காரே வெளியிடுமாம்

இராஜஸ்தான் சர்க்காரின் விசித்திரப் போக்கு

ஜெய்ப்பூர், மார்ச் 13—

அடுத்த ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் இராஜஸ்தான் மாநிலப் பள்ளிகளில் எட்டாம் வகுப்புவரை எல்லாப் பாடங்களுக்கும் சர்க்காரே புத்தகங்கள் தயாரித்து வெளியிடுமாம்!

தனிப்பட்ட எவரும் இந்தப் புத்தகங்களை வெளியிட முடியாதவாறு இந்தத் துறையை மாநில சர்க்கார் தேசிய மயமாக்கி விட்டனராம்!

இந்தத் திட்டப்படி, புத்தகங்கள் தயாரிக்க எல்லாப் பாடங்களிலும் தகுதிபடைத்த ஆசிரியர் குழு ஒன்றையும் சர்க்கார் பொறுக்கி அமைத்துவிட்டதாம்.

இப்படி தயாரிக்கப்படுகிற புத்தகங்களையெல்லாம் மீண்டும் ஒருமுறை பார்வையாளர் சரிபார்த்து, அவர்களுடைய சிபாரிசைப் பெற்றன பின்னர், உயர் நீதிமன்ற நீதிபதிஒருவர், பொதுப் பணிக்குழு உறுப்பினர் ஒருவர், பாடப் புத்தக தேசியமயக்குழு உறுப்பினர் ஒருவர் ஆகிய மூவரடங்கிய ஒரு உயர்தரக் குழுவினரால் பரிசீலிக்கப்படுமாம்.

இரயில் போக்குவரத்து பிரச்சினைகள்

ஆராய அமெரிக்க நிபுணர் குழு இந்தியா வருமாம்

வாஷிங்டன், மார்ச் 14—

இரயில்வே போக்குவரத்துப் பிரச்சினைகளை ஆராய்வதற்காக 18 பேரடங்கிய அமெரிக்க நிபுணர் குழு ஒன்று இந்தியாவிற்கு வரவிருக்கிறதாம்.

இந்த குழுவினர், இந்திய இரயில்வேயில் போக்குவரத்துப் பிரச்சினைகளை ஆராய்வதுடன், ஜப்பானுக்கு ஒரிசா இரும்புச் சுரங்கத்திலிருந்து கனிப் பொருள்கள் துரிதமாக ஏற்றுமதி செய்யப்படுவதற்கான வழி முறைகளையும் ஆராய்வராம்.

டெல்லி அருகே

கூட்டுறவுப் பயிற்சி நிலையம்

புதுடில்லி, மார்ச் 13—

டெல்லியிலிருந்து சுமார் 20 மைல் தொலைவில் தோஹை எனும் இடத்தில் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறதாம்.

எல்லா மாநிலங்களையும் சேர்ந்த சுமார் 55 பேர்களுக்கு இங்கு கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்படுமாம்.

சென்னைக்கு டில்லி தரும் நிதிப் 'பிச்சை'!

புதுடில்லி, மார்ச் 13—

நடைபெற்றுவரும் சென்னை மாநிலத்தின் நிதி ஆண்டில், மாநில ஸ்தல ஸ்தாபன அபிவிருத்தித் திட்டச் செலவுகளுக்காக மேற்கொண்டு சிறிதளவு பொருளுதவி தர மத்திய சர்க்கார் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

சென்னை மாநில சர்க்காரின் இந்த நிதி ஆண்டின் திட்டச் செலவுக்கான தொகையை ரூ. 1 கோடியாக உயர்த்துவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

பம்பாய் மொழிவாரிப் பிரச்சினையில்

காங்கிரசுக்கு மக்கள் தரும் தீர்ப்பு

வடநாட்டு மாநிலங்களில்-குறிப்பாகப் பம்பாய் மாநிலத்தில் காங்கிரஸ் பெருந்தலைகளும், அமைச்சர்களும் படுதோல்வியுற்று மண்ணைக் கவ்விவரும் செய்திகள் கிடைத்தவண்ணமுள்ளன.

பம்பாய் மாநிலத்தில்......

பம்பாய் சட்டசபைக்குப் போட்டியிட்ட சிவில் விநியோக, தொழில் மந்திரியான காதே என்பார், சுமார் 1,500 வாக்குகள் குறைவாகப் பெற்றுப் படுதோல்வி கண்டிருக்கிறார். சம்யுக்த மகாராட்டிர சமிதியினரின் ஆதரவு பெற்ற கம்யூனிஸ்டு அபேட்சகர் வெற்றி பெற்றிருக்கிறார்.

ஓர்லி என்னும் தொகுதியில் தாழ்த்தப்பட்டோர் சம்மேளன அபேட்சகர் ஒருவர் 15,570 வாக்குகள் பெரும்பான்மையுடன் பெற்று காங்கிரஸ் அபேட்சகரை தோற்கடித்திருக்கிறார்.

பாரெல் எனும் தொகுதியிலும் காங்கிரஸ் அபேட்சகரைவிட 14,044 வாக்குகள் அதிகம்பெற்று பி. சோ. கட்சி அபேட்சகர் வெற்றி பெற்றிருக்கிறார்.

மஸ்கான்தொகுதியில் சம்யுக்த மகாராட்டிர ஆதரவு பெற்ற சுயேச்சை அபேட்சகர் ஒருவர் காங்கிரஸ் அபேட்சகரை தோற்கடித்திருக்கிறார்.

இதுபோலவே செரி, மாகிம் தொகுதிகளிலும் முறையே கம்யூனிஸ்டு அபேட்சகரும் சம்யுக்த மராட்டிய சமிதி ஆதரவு பெற்ற பி. சோ. கட்சி அபேட்சகரும் காங்கிரஸ் அபேட்சகர்களைத் தோற்கடித்திருக்கின்றனர்.

அசாம் காங்கிரஸ் தலைவர் படுதோல்வி

அசாம் பிரதேசக் காங்கிரஸ் தலைவரும், இப்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான பிமல பிரசாத் காலிகா என்பார் படுதோல்வியுற்றிருக்கிறார்.

இதுவரை அசாம் மாநிலத்தைச் சேர்ந்த மலைப் பகுதியிலுள்ள தொகுதிகளில் காங்கிரஸ் அபேட்சகர்கள் குப்புறக் கவிழ்க்கப்பட்டுவிட்டனர்.

பிகார் மந்திரி கவிழ்ந்தார்

பீகார் மாநில நிலவரி அமைச்சரான கிருஷ்ண வல்லப சகாய், ஜனதா கட்சித் தலைவர் பெற்றப் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்.

சுதந்திர ஆட்சியில்!

படித்தவர்களிடை நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம்

ஒரு புள்ளிவிவரம்

புதுடில்லி, மார்ச் 12—

நாட்டில் உள்ள வேலை தேடித்தரும் நிலையங்களில் 1956 அக்டோபர் டிசம்பர் மாத காலத்தில் 1,03,769 பேர் பெயர் பதிவு செய்து கொண்டனர். அவ்வாறு பதிவானவர்களில் 78,653 பேர் மெட்ரிகுலேட்டுகள்; 13,582 பேர் இண்டர்மீடியட் வரை படித்தவர்கள்; 11,534 பேர் பட்டதாரிகள்.

வேலை தேடித்தரும் நிலையங்கள் பெயர் பதிவு செய்துகொண்ட இத்தகையோரின் மொத்த எண்ணிக்கை பரிசீலனைக் காலத்தின் இறுதியில் 2,44,392 ஆக பேர்தது. இவர்களில் 1,86,978இருந் மெட்ரிகுலேட்டுகள்; 30,640 பேர் இண்டர்மீடியட்டுகள்; 26,744 பேர் பட்டதாரிகள்.

பட்டதாரிகளில் 481 பேர் எஞ்சினியர்கள்; 213 பேர் டாக்டர்கள்; 26,080 பேர் இதர துறைகளில் பட்டம் பெற்றவர்கள்.

பெயர் பதிவாகியிருந்த படித்த பெண்களின் மொத்த எண்ணிக்கை பரிசீலனைக் காலத்தின் இறுதியில் 14,760 ஆக இருந்தது; இவர்களில் 11,894 பேர் மெட்ரிகுலேட்டுகள்; 1,238 பேர் இண்டர்மீடியட் படித்தவர்கள்; 1,628 பேர் பட்டதாரிகள்.

காஷ்மீர் விவகாரம்

‘சீட்டே’ நிறுவனப் பிரச்சினையல்லவாம்!

டல்லஸ் தரும் விளக்கம்

கான்பெர்ரா, மார்ச் 13—

காஷ்மீரைப் பொறுத்த விவகாரம் ‘சீட்டோ’ நிறுவனத்தை எதிர்நோக்கியுள்ள ஒரு பிரச்சினையாகத் தாம் கொள்வதற்கில்லை என்று அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் டல்லஸ் இங்கு பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறாராம்.

ஒரு கூட்டு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அளவுக்கு ‘சீட்டோ’ நாடுகள் மீது தாக்குதல் ஏதேனும் ஏற்படுமானால், அத்தாக்குதல் ஏதாவது ஒரு கம்யூனிஸ்டு நாட்டிலிருந்துதான் ஏற்படும் என்றும் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டாராம்.

‘மத்தியக் கிழக்கு நாடுகள் ஏதாவது ஒன்றின் மீது தாக்குதல் நடைபெற்றால், அந்த நாட்டுக்கு, ஐசனேவர் கொள்கைப்படி இராணுவ உதவி கிடைக்கப் பெறுமா?’ என்று அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

ஜாரிங் முயற்சி முடிவு தேடும்!

இலண்டன், மார்ச 13—

ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தலைவரான ஜாரிங் மேற்கொண்டுள்ள முயற்சி, இந்தியாவிற்கும்-பாகிஸ்தானுக்குமிடையேயுள்ள காஷ்மீர் விவகாரத்திற்கு ஒரு முடிவைத் தேடித் தரும் என்று பிரிட்டிஷ் சர்க்கார் கருதுவதாக காமன்வெல்த் உறவு இலாகா துணை மந்திரி ஒருவர் கூறியிருக்கிறார்.

காஷ்மீர் பற்றிய பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கை என்னவென்று கேட்கப்பட்டபோதே அவர் அவ்வாறு கூறியுள்ளார்.

தசாம்ச நாணயமுறை அமுலுக்குப்பின்!

போஸ்டல் ஆர்டர் கமிஷன்பற்றி ஒரு தகவல்

புதுடில்லி, மார்ச் 14—

1957 எப்ரல் 1-ந்தேதி முதல் நாட்டில் தசாம்ச நாணயமுறை அமுலுக்கு வரும்போது தனியாகத் தரப்படுகிற ஒரு இந்தியப் போஸ்டல் ஆர்டரின் மதிப்பு 50 நயா பைசா அல்லது அதன் பெருக்கமாக இருக்குமாம்.

ரூ. 10 வரை அப்படிக் கணக்கிட்டுத் தரப்படும். 50 நயாபைசா முதல் ரூ. 5 வரையுள்ள போஸ்டல் ஆர்டர்களுக்கு 5 நயா பைசா கமிஷன் வாங்கப்படும்; ரூ. 5 முதல் ரூ. 10 வரையிலுள்ள போஸ்டல் ஆர்டர்களுக்கு 10 நயா பைசா கமிஷன் தரப்படும் என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

நேர் தொகையில்லாத சில்லறைத் தொகை மதிப்பில் போஸ்டல் ஆர்டர் தேவைப்பட்டால் அதிகப்படித் தொகைக்கு, உபயோகிக்கப்படாத தபால்தலைகளை ஒட்டித் தரலாம். ஆனால் ஒரு போஸ்டல் ஆர்டரில் மூன்றுக்கு மேற்பட்ட தபால்தலைகளை ஒட்டக்கூடாது. அதோடுகூட, அந்தத் தபால் தலைகளின் மொத்த மதிப்பு 50 நயா பைசாவுக்குக் குறைவாக இருக்கவேண்டும்; மொத்தம் போஸ்டல் ஆர்டர், தபால் தலைகள் ஆகியவைகளின் கூட்டு மதிப்பு ரூ. 10-க்கு மேற்படக் கூடாது.

டில்லியின் வரவு-செலவுத் திட்டம்

மார்ச் 19-ந் தேதியன்று தாக்கலாகும்

புதுடில்லி, மார்ச் 12—

மத்திய சர்க்காரின் வரவு-செலவுத் திட்டம், இரயில்வே பட்ஜெட், மற்றும் கேரள மாநிலத்திற்கான வரவு-செலவுத் திட்டம் ஆகியவைகள் வரும் மார்ச் 19-ந் தேதியன்று மாநிலங்கள் சபை கூடும்போது தாக்கல் செய்யப்படுமாம்.

கல்லூரிகளிலும் நிறப் பாகுபாடா?

இன வெறியர்களின் தீவிர முயற்சி

கேப்டவுன், மார்ச் 12—

வெள்ளையரல்லாதாருக்கு எனதனிப்பட்ட பல்கலைக் கழக வசதி ஒன்றை செய்துதந்துவிடுவதென தெ. ஆ. சர்க்கார், அங்கு கிலவி வரும் பலத்த எதிர்ப்புகளையும் கூடப் பொருட்படுத்தாமல் சட்டம் நிறைவேற்றிவிட முன்வந்திருக்கின்றனர்.

தெ. ஆ. சர்க்காரின் ‘இனதுவேஷ’க் கொள்கையின் விளைவாக எழுந்துள்ள இந்தப் பயங்கரமான முடிவை, தனக்குச் சாதகமாக இருக்கும் பெருத்த ஆதரவையும் பெரும்பான்மையையும் துணைகொண்டு நிறைவேற்றிவிடும் என்ற அச்சம் இப்போது நிலவுகிறதாம்.

இந்த மசோதாவை தெ. ஆ. கல்வி, விஞ்ஞான, கலை அமைச்சரே சட்டசபையில் பிரரேபிக்க இருக்கிறார் என்றும், இச்சட்டத்தின்மூலம், இதுவரை ‘நிறவெறி’க் கொள்கை கடைப்பிடிக்கப்படாமல் எல்லா ‘நிறத்’தவரும் அனுமதிக்கப்பட்டுவந்த விட்வாட்டர் ஸ்ரான்ட், கேப்டவுன் பல்கலைக் கழகங்களில் இனிமேல் வெள்ளையரல்லாதார் அனுமதிக்கப்படப் போவதில்லை என்றும் தெரிகிறது.

தென் ஆப்பிரிக்காவில் உள்ள பல பல்கலைக் கழகங்களிலும் இதுவரை 500 வெள்ளையரல்லாதார் பயிற்சி பெறுகின்றனர். இவர்களில், கேப்டவுன் பல்கலைக் கழகத்தில் மட்டும் சுமார் 300 வெள்ளையரல்லாதார் இருக்கின்றனராம்.

இப்போது அங்கு வெள்ளையர்களுக்காக மட்டும் 6 பல்கலைக் கழகங்களும் வெள்ளையரல்லாதாருக்கென ஒரு பல்கலைக் கழகமும் இருக்கிறதாம்.

இந்த மசோதா வெள்ளையரல்லாதாருக்கென நேட்டால், டிரான்ஸ்வால் ஆகிய இரு இடங்களிலும் வெள்ளையரல்லாதாருக்கென இரண்டு பல்கலைக் கழகங்கள் நிறுவ வழி செய்கிறது என்றும், இதுதவிர இந்தியர்களுக்காகமட்டும் டர்பனில் ஒரு பல்கலைக் கழகக் கல்லூரியும், மற்ற நிறத்தவர்களுக்கென மட்டும் கேப் மாகாணத்தில் ஒரு பல்கலைக் கழகக் கல்லூரியும் நிறுவப்பட இருக்கின்றனவாம்.

அதுபோலவே, மருத்துவத் துறை படிப்பிலும் இந்த இனத் துவேஷச் சட்டத்தின் மூலம் வெள்ளையர் — வெள்ளையரல்லாதார் என்ற பாகுபாடு காட்டப்பட இருக்கிறது! நேட்டாவில் உள்ள மருத்துவக் கல்லூரியில் படிக்கும் வெள்ளையரல்லாதாரை வெள்ளையரிடமிருந்து பிரித்துவிடுவதற்கென, வெள்ளையரல்லாதாருக்குமட்டும் ஒரு மருத்துவப் பள்ளி நிறுவவும் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

இந்த இனத் துவேஷ—நிறவெறிச் செயல்கள் எல்லாம் உடனடியாக நடைபெறுவிட்டாலும் சிறுகச் சிறுக எப்படியேனும் நிலைநாட்டப்படத்தான் போகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தெ. ஆ. சர்க்காரின் இந்த நிறவெறிச் செயல்களின் காரணமாக வெள்ளையர், வெள்ளையரல்லாதார் ஆகியோரைப் பிரிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன், வெள்ளையரல்லாதாருக்கு வேறு கல்லூரிகள் கட்டித்தருவது என்ற முடிவின் விளைவாக, கட்டிடச் செலவுகளுக்காகவும் புதிய ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்தவும் மட்டுமே தெ. ஆப்பிரிக்க வெள்ளை ஏகாதிபத்திய சர்க்கார் இலட்சம் இலட்சமாகப் பவுன்களைக் கொட்டிச் செலவழிக்கப் போகிறது!

இந்த இலட்சணத்தில், வெள்ளையரல்லாதாருக்குத் தரப்படும் கல்விப் பயிற்சியின் ‘தரம்’ குறைந்துவிடாமல் கவனித்துக் கொள்வதற்கென, தென் ஆப்பிரிக்கப் பல்கலைக் கழகமே இவைகளுக்கான ‘தேர்தல் கேந்திரமா’கவும் அமையப் போகிறதாம்!

மசோதாவிற்கு எதிர்ப்பு

இந்த மசோதா, தென் ஆப்பிரிக்க சட்டசபையில் முதன் முறையாகக் கொண்டுவரப்பட்டதும் அதனை அங்குள்ள எதிர்க் கட்சியான ஐக்கியக் கட்சி எதிர்த்தது.

ஐந்து புதிய ஆராய்ச்சிக்கூடங்கள்

அத்தனையும் வடநாட்டில்தான்?

புதுடில்லி, மார்ச் 13—

பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பாதுகாப்பது பற்றிய ஆராய்ச்சி நடத்துவதற்காக ஐந்து பிரதேச ஆராய்ச்சிக் கூடங்களை நிறுவுவதென டில்லி முடிவு செய்துள்ளதாம்.

இந்த நிலையங்கள் அனைத்தும் வழக்கம்போல, வடநாட்டிலேயேதான் அமைகின்றன!

பஞ்சாப், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பம்பாய், மேற்கு வங்கம் ஆகிய ஐந்து மாநிலங்களில்தான் இந்த ஆராய்ச்சிக்கூடங்கள் அமைக்கப்படுகின்றன!

தென்னாட்டில் எந்த மாநிலத்திலும், பாதுகாப்பது எப்படி என்ற ஆராய்ச்சிக்குரிய பழங்களும், காய்கறிகளும் உற்பத்தியாகவில்லையோ, என்னவோ?

கடனுக்குக் கப்பல் கிடைக்குமா?

டில்லி ஏங்குகிறது!

அமெரிக்கா 12 கப்பல்களை விற்குமாம்

புதுடில்லி, மார்ச் 13—

அமெரிக்காவிடமிருந்து இந்தியா, சுமார் 12 கப்பல்கள் வாங்கக்கூடும் என்று தெரிகிறது.

இந்தியா தனக்குத் தேவையான கப்பல்களை, எந்த வெளிநாடாவது நீண்டகாலக் கடன் என்ற அடிப்படையில் தயாரித்துத்தர முடியுமா என்று பார்க்கவிருக்கிறதாம்!

இரண்டாம் திட்டத்தில், கப்பல் போக்குவரத்துத் துறை வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்ட ரூ. 37 கோடியும் ஏற்கனவே காலி செய்யப்பட்டுவிட்டதால், கடனுக்குக் கப்பல் கிடைக்குமா என்று டில்லி ஏங்கிக்கிடக்கிறதாம்!

இந்திய இரயில்வே சட்டத்தின் லட்சணம்?

இரயில் வண்டிகளில் ஒரு குறிப்பிட்ட ‘சீட்டை’ ரிசர்வ் செய்துவிட்ட பின்னர், அந்த இடத்தில் வேறெவரேனும் வந்து உட்கார்ந்து கொள்வதையோ, ரிசர்வ் செய்தவர் தம்முடைய இடத்தில் உட்கார்ந்திருப்பவரைக் காலி செய்து தருமாறு கேட்க அவர் அதை மறுப்பதையோ குற்றமாகக் கருதித் தண்டிப்பதற்கு, இந்திய இரயில்வே சட்டத்தில் விதி வகுக்கப்பட்டிருக்கவில்லை எனக் கண்டுபிடித்து, எனவே அவ்வாறு செய்வது குற்றமாகாது என வழக்கொன்றில் தீர்ப்புக் கூறியிருக்கிறார் நீதிபதி ஒருவர்.

ஐதராபாத்தில் இதுபோன்ற ஒரு வழக்கினை அங்குள்ள விசேட இரயில்வே நீதிபதி ஒருவர் விசாரித்தபோதே மேற்கண்டவாறு தீர்ப்பு வழங்கியிருக்கிறார் எனத் தெரிகிறது.

அல்ஜீரியக் கிளர்ச்சியில் 50 பேர் பலியாயினர்!

அல்ஜீரியா, மார்ச் 14—

அல்ஜீரியாவில் விடுதலைக் கிளர்ச்சிக்காரர்களுக்கும் பிரெஞ்சுப் படைகளுக்குமிடையே 24-மணி நேரமாக நடைபெற்ற கைகலப்புகளில் 50 கிளர்ச்சிக்காரர்கள் கொல்லப்பட்டனரென அறிவிக்கப்படுகிறது.

ஆந்திர மாநில அணைக்கட்டுத் திட்டம்

‘ஆமை’ வேகத்தில் செல்லும் பரிதாபம்!

ஆந்திர மாநிலத்தில் சூரியாபேட்டை தாலுகாவில் மூசி அணைக்கட்டு ஒன்றைக் கட்டுவதற்கான திட்டம் ஒன்றினை ஆந்திர மாநில சர்க்கார் தீட்டியது.

இந்தத் திட்டத்திற்கான செலவு ரூ. 1 கோடி 18 இலட்சமாகவும் குறிப்பிட்டிருந்தது.

இந்தத் திட்ட வேலைகளும் கடந்த 1954-ம் ஆண்டிலேயே துவங்கிற்று.

உணவு உற்பத்தியில், மேலும் 15,000 டன் உணவுத் தானியத்தைப் பெருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் அத்திட்டம் துவங்கப் பெற்றது.

உற்பத்தியில் 15,000 டன் உணவுத் தானியத்தை பெருக்குவதற்கென சுமார் ஒரு கோடி ரூபாய் மட்டுமே செலவு கொண்டதும், துவங்கி 3 வருட காலம் முடியும் தறுவாயிலுமுள்ள இந்த அணைக்கட்டு, இன்னும் அத்திட்ட வேலைக்குத் தேவைப்படும் நிலக்கரி கொண்டுவரப்படுவதற்கான வசதிகள் செய்யப்படும் நிலையிலேயே இருந்து வருவதாகத் தெரிகிறது!

இத்திட்ட வேலைகள் சம்பந்தமாக இதுவரை ஏராளமான லாரிகள் மட்டும் விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும், இரண்டு ‘ஜெனரேட்டர்’களும் தரப்பட்டுள்ளன என்றும் தெரிகிறது.

பாகிஸ்தானுடன் மற்றொரு தகராறு!

புதுடில்லி, மார்ச் 14—

சிந்து நதித் தண்ணீர் தகராறைத் தீர்க்க உலக பாங்கி செய்துவரும் முயற்சி இம்மாதம் 13-ந் தேதிக்கு மேல் போகக்கூடாது என்று இந்திய அரசாங்கம் கருதுவதாகத் தெரிகிறது.

கடந்த 5 ஆண்டுகாலமாக இத்தகராறு தீருவதற்காக காத்திருந்ததாம்!

உலக பாங்கி கூறிய யோசனையை பாகிஸ்தான் ஏற்க மறுத்து சர்வதேச நீதிமன்றத்திற்குப்போக விரும்புகிறதாம்.

இந்த நிலையில் மேலும் தாமதிப்பது பாகிஸ்தானுக்கு சாதகமாக இருப்பதால், இந்தியா 1948-ம் ஆண்டில் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லையென்றும் கூறப்படுகிறது,

இத்தகராறுக் காரணமாக இந்தியா, தன்னுடைய நதிகளிலிருந்து முன்பு பயன்படுத்திக் கொண்டுவந்த தண்ணீரையும் உபயோகித்துக்கொள்ள முடியாமலிருக்கிறதாம்.

பலாத்காரமாக ஆட்சியை கைப்பற்றியவருக்கு எதிராகக் கொரில்லா போர்

கியூபா குடியரசுத் தலைவரின் மாளிகை மீது குண்டுமாரி

40 பேர் படுகொலை செய்யப்பட்டனர்

ஹவானு (கியூபா), மார்ச் 14—

கியூபா நாட்டு குடியரசுத் தலைவரின் மாளிகையை ஆயுதந் தரித்த சிலரும், ஒரு மாணவர் கூட்டமும் இயந்திரத் துப்பாக்கி கொண்டு தாக்கியதாகவும், உடனே இராணுவத்தினர் எதிர்த்தாக்குதல் நடத்தி சுமார் 40 பேர்களை பலிகொண்டு அரண்மனையைக் காத்தனர் என்றும் கியூபாவைச் சேர்ந்த ஹாங்குவிலிருந்து செய்திகள் வெளி வந்துள்ளன.

5 போலீசாரும் கொல்லப் பட்டதாகக் கூறப்படுகிறது.

ஹவாளு பல்கலைக் கழகத்தின் மீதும் துப்பாக்கித் தாக்குதல் நடைபெற்றதாகவும் கூறப்படு கிறது.

இருந்த ஆட்சியைக் கவிழ்த்து விட்டு, 1952-ல் பதவியைக் கைப்பற்றிய தலைவர் பதிஸ் தாவிற்கு எதிராக, இந்த 44,000 சதுர மைல் பரப் புள்ள கியூபா தீவைச் சேர்ந்த மக்கள் கொரில்லாப் போர் நடத்திவருகின்றனராம்.

அதன் ஒரு பகுதியே இந்த தாக்குதல்கள் என்றும் கூறப்படுகிறது.

திருமணத்திற்கு வரியாம்!

டாக்கா, மார்ச் 14—

கிழக்கு பாகிஸ்தான் சர்க்கார் 1957—58-ம் ஆண்டுப் பட்டிய லில் துண்டு விழுந்த தொகை யைச் சரிகட்ட பல புது வரிகள் போட்டிருக்கிறதென்றும் அதில் ஒன்று 'திருமண வரி' என்றும் தெரியவருகிறது.

திருமணம் ஒன்றுக்கு ரூ. 15 வரி விதிக்கப்படுமாம்!

ரூ. 4-ம் அதற்குக் குறைவாக வும் யூனியன் வரி செலுத்து வோருக்கும் ரூ. 40-க்கு உட்பட்ட வரி செலுத்துவோருக்கும் திரு மண வரி இல்லையாம்.

இத்திருமண வரியால் சர்க் காருக்கு ரூ. 8 இலட்சம் கிடைக்கு மென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இருமொழி பம்பாய் ஏற்பாடு முடிந்துவிட்ட விவகாரமாம்!

புதுடில்லி, மார்ச் 13—

இருமொழி பம்பாய் மாநிலம் என்ற ஏற்பாடு, முடிவாகிவிட்ட விவகாரம் என்று டில்லியில் கருதப்படுகிறதாம்!

இந்த ஏற்பாட்டினை எதிர்க்கும் மகாகுஜராத் ஜனதா பரிஷத், மற்றும் சம்யுக்த மராட்டிய சமிதி ஆகியவை, தேர்தலில் பெற்றுள்ள வாக்குகளும் வெற்றிகளும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டியவை அல்ல என்றும், அவை அலட்சியத்திற்குரியன என்றும் டில்லி கருது கிறதாம்!

காங்கிரசுக்கு தேர்தலில் கிடைத் திருக்கும் வெற்றியைக் கொண்டு, இருமொழி பம்பாய் ஏற்பாடு என்ற விவகாரம் முடிந்துவிட்டதாகவே கருத வேண்டும் என்றும், அந்த விவ காரத்தை மீண்டும் கிளறக் கூடாது என்றும் கூறப்படு கிறது.

'பொறுமையை இழந்துவிடாதீர்'

எகிப்திற்கு யூகோவின் அறிவுரை

பெல்கிரேட், மார்ச் 14—

'மத்தியக் கிழக்கில் மீண்டும் நெருக்கடியைத் தோற்றுவிக் கும் எந்தவித அவசர நடவடிக் கையையும் மேற்கொள்ள வேண்டாம்,'

என்று, எகிப்திற்கு நேரடி முறை யில் யூகோ அறிவுரை பகன்றிருப் பதாகவும் தொடர்ந்து, அந்த நிதியில் எகிப்திற்கு யோசனை களைக் கூறும் என்றும் தெரிய வருகிறது.

மத்தியஸ்தம் அல்ல!

யூகோ, மத்தியக் கிழக்கு நெருக்கடிக்கு மத்தியஸ்தம் செய்யமுன் வரவில்லை என்றும், காஜா பிரதேசத்தின் எதிர்காலம் போன்றப் பிரச்சினைகளில் எகிப்து, முடிந்த அளவு பொறுமையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று யோசனை மட் டுமே கூறுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

முதல் உத்தரவு?

கெய்ரோ, மார்ச் 13—

காசா பகுதிக்கான முதல் நிர் வாக உத்தரவை எகிப்து பிறப் பித்துவிட்டது; அப்பகுதியில் எகிப்து நிர்வாகத்திற்குச் சேர வேண்டிய எல்லாப் பாக்கிகளை யும் உடனடியாக செலுத்த வேண்டுமென்றும், காசா பகுதி யில் விளைந்துள்ள எல்லாப் பழங்களையும் எகிப்துக்குள் கொண்டுவர வேண்டுமென்றும் அவ்வுத்தரவில் குறிப்பிடப்பட் டிருக்கிறதாம்.

யூ-நு சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

எதிர்க்கட்சியினர் முயற்சி தோல்வி

இரங்கூன், மார்ச் 14—

மீண்டும் யூ-நுவைப் பிரதம ராகக் கொண்டுள்ள பர்மா சர்க் கார் மீது சட்டசபையில், எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த நம்பிக் கையில்லாத் தீர்மானம் பெரு வாரியான வாக்குகளால் தோற் கடிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டில் அமைதியையும் ஒழுங் கையும் நிலைநாட்ட சர்க்கார் தவறிவிட்டதாகக் கூறி எதிர்க் கட்சியினர், யூ-நு சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தனர்.

காசா பகுதியில் எகிப்துக்கு உரிமை

ஐ. நா. ஒப்புக்கொள்கிறது!

ஐ. நா., மார்ச் 14—

காசா பகுதியில் நிலவும் பிரச் சினைகளைப் பொறுத்தவரையில் இந்தியாவுக்கும்—ஐ. நா. நாடு களுக்குமிடையே கருத்தொற் றுமை இருப்பதாகவும், குறிப் பாக காசா எல்லையில் எகிப்துக்கு சட்டப்படி முழு அதிகாரமும் உரிமையும் உண்டு; அந்த எல்லை யின் இருபுறத்திலும் ஐ. நா. அவசரகாலப் படை நிறுத்திவைக் கப்பட்டிருக்கவேண்டும்; அப் பகுதியில் நிலையானதோர் சமூக மான முடிவுவரையிலும் தற் காலிகமாகவே ஐ. நா. படை இருக்கவேண்டும் என்பன போன்ற இந்தியாவின் கொள்கை களுக்கு ஐ. நா. ஆதரவு தருவ தாகவும் தெரியவருகிறது.

ஐ. நா.-வுக்கும் இந்தியாவுக்கு மிடையே ஒற்றுமை காணப்படும் இந்தக் கருத்துக்கள் ஐ. நா. பொதுச்செயலாளர் கவனத்திற் குக் கொண்டுவரப்பட்டிருக்கின் றன என்றும், இதையொட்டி ஐ. நா. செயலாளருக்கும் எகிப் துத் தலைவர் நாசருக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடத்துவதற் கான வழிவகைகள்பற்றி அடுத்து கவனிக்கப்படும் என்றும் ஐ. நா. பார்வையாளர் ஒருவர் கூறியிருக் கிறாராம்.

காசா பகுதியில் சட்டபூர்வ மான நடவடிக்கைகள் எவற்றிற் கும் பங்கம் விளைவிக்காதவகை யில், எகிப்து காசா பகுதியின் மீதுள்ள தனது உரிமையை எகிப்து படிப்படியாகப் பெற முன்வரலாம் என்று, ஐ. நா. வி லுள்ள ஆசியப் பிரதிநிதிகள் நம்புவதாகவும் தெரிகிறது.

பாங்காக், மார்ச் 14—

தாய்லாந்து முழுமையிலும், பொதுத் தேர்தலையொட்டி சில நாட்களுக்கு முன்னர் பிறப்பிக் கப்பட்டிருந்த அவசர நிலைமை அறிக்கை ரத்து செய்யப்பட்ட தாகத் தெரிகிறது.

பாக்தாத் ஒப்பந்தம்

அமெரிக்காவும் சேருமாம்

லாகூர், மார்ச் 14—

'இராணுவ ஒப்பந்தங்கள் ஆபத் தானவை,' என்ற கண்டனம் வலுத்துவரும்நாளில் அமெரிக்கா, பாக்தாத் ஒப்பந்தத்தில் சீக்கி ரமே சேர்ந்துகொள்ளும் என்று பாகிஸ்தானில் உள்ள அமெரிக் கத் தூதுவர் கூறியிருப்பது ஆச் சரியமாயிருக்கிறது.

'பாக்தாத் ஒப்பந்தத்தில் அமெ ரிக்கா சேருமா?' என்று பத்திரி கையாளர் கேட்டபோது, ஹோரேஸ் ஹில்டேர்த் என்ற அந்தத் தூதுவர், 'இன்னும் சில காலத்திற்குப் பிறகு மேலும் சில அரபிய நாடுகளையும்கூட அமைத்துக்கொண்டு பாக்தாத் ஒப்பந்தத்தில் அமெரிக்கா இடம் பெறுவது நல்லதல்லவா?' என்று திருப்பிக்கேட்டாராம்!

மேலும் ரூ. 8 கோடி பாழடிக்கமுடிவு!

1956-57-ல் 1,80,000 அம்பர் இராட்டைகளாம்

புதுடில்லி, மார்ச் 15—

1956—57-ம் ஆண்டில் மேலும் 1,80,000 அம்பர் இராட்டை களை நிறுவ டில்லி முடிவு செய்திருக்கிறதாம்.

இதில் 30,000 இராட்டைகள் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்படு மாம்!

இதற்கு ரூ. 8 கோடி செலவிடப்போகிறர்களாம்!

நடைபெறும் ஆண்டில் 75 ஆயி ரம் 'அம்பர் இராட்டை'கள் அமைக்க எச்சனவே நிதி உதவி யிருப்பதும் தெரிந்ததே!

அமெரிக்காவிலிருந்து பண்டங்கள் கடன்பெற

வாஷிங்டன், மார்ச் 14—

அமெரிக்காவிடமிருந்து உபரி யான பண்ணைப் பண்டங்களைக் கடனாகப் பெற்றுச் செல்வதற் காக போலந்து நாட்டிலிருந்து ஒரு தூதுக்குழு வந்துள்ளது.

போலந்திற்கு பொருளாதார உதவி செய்யும்வகையில் சட்டத் தைத் திருத்துமாறு தாம் காங் கிரசைக் கோரப்போவதாக அமெ ரிக்கத் தலைவர் ஐசனேவர் கூறி யிருக்கிறார்.

கம்யூனிஸ்டு நாடுகளுக்கு இது போல கடனுதவி அளிப்பதை அமெரிக்கச் சட்டம் தடுக்கிறது என்பதாலேயே, சட்டத்தைத் திருத்த ஐசனேவர் முயற்சிக் கிறார் என்றும் கூறப்படுகிறது.

களம் புகுந்த கழக வீரர்கள்

மக்கள் தந்த ஆதரவு விவரங்கள்

சென்னை, மார்ச் 15—

தேர்தல் முடிவுகள் குறித்து மேலும் சில இடங்களிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

சென்னை பேசின்பிரிட்ஜ் தொகுதியில் கழக அபேட்சக ராகப் போட்டியிட்ட துணைப் பொதுச்செயலாளர் என். வி. நட ராசன் அவர்களைவிட சுமார் 6,000 வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டிருக் கிறது.

தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கு 14,367 வாக்குகளும் காங்கிரஸ் அபேட்சகருக்கு 20,441 வாக்குகளும கிடைத்தன. மற்றும் இரண்டு சுயேச்சைகள் முறையே 866; 564 வாக்குகள் மட்டுமே பெற்று டிபாசிட் இழந்திருக்கின் றனர்.

பெரம்பலூர் இரட்டைத் தொகுதியிலும் ஆற்காட்டுத் தொகுதியிலும் கழக அபேட்சகர் களைவிட அதிக வாக்குகள் பெற்றுக் காங்கிரஸ் அபேட்சகர் கள் வெற்றி பெற்றதாக அறிவிக் கப்பட்டிருக்கிறது.

அறந்தாங்கி தொகுதியில், காங் கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 3,000 வாக்குகள் அதிகம் பெற்று சுயேச்சை அபேட்சகர் வெற்றி பெற்றிருக்கிறார்.

கழகம் போட்டியிடாத மற்றத் தொகுதிகளுள் சென்னை துறை முகம், பத்மனாபபுரம், மானா மதுரை ஆகிய தொகுதிகளில் காங்கிரஸ் அபேட்சகர்களே வெற்றி பெற்றதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டுகளை ஒடுக்க படை தேவைப்படுகிறதாம்

கோலாலம்பூர், மார்ச் 13—

தற்போது மலேயாவில் 12,000 பிரிட்டிஷ் படைகள் இருக்கின் றன. ஆகஸ்டு 31-ல் மலேயா சுதந் திரம் பெற்ற பின்னரும், மலேயா வில் உள்ள கம்யூனிஸ்டுக் கலகக் காரர்களை ஒடுக்க பிரிட்டிஷ் படை கள் தேவைப்படுவதால், தற் போது உள்ள பிரிட்டிஷ் படை பாதியாக மட்டுமே குறைக்கப் படும் என்று மலேயா முதலமைச் சர் அப்துல் ரெஹ்மான் தெரி வித்துள்ளார்.

பயனற்ற திட்டத்திற்கு பணம் ஒதுக்குவதா?

புதுடில்லி, மார்ச் 13—

அம்பர் சர்க்கா பற்றிய ஆராய்ச் சித் திட்டத்திற்கு ஆமதாபாத் ஆலைத் தொழில்கள் ஆராய்ச்சிக் கழகத்திற்கு இந்தியப் பேரரசு ரூ. 62,920 மானியம் அனுமதித் துள்ளதாம்!

இந்த உதவித் தொகையைக் கொண்டு நடத்தப்படும் ஆராய்ச் சியின் முடிவுகள்யாவும் அகில இந்திய கதர்-கிராமக் கைத் தொழில் கழகத்தின் உரிமையா கப் பாவிக்கப்படுமாம்.

நடப்பு நிதி ஆண்டில் அம்பர் சர்க்கா திட்டத்திற்காக இந்தியக் கதர்- கிராமக் கைத்தொழில்கள் சழகத்திற்கு ரூ. 66,80,000 கொடுத்துதவவும்இந்தியசர்க்கார் முடிவு செய்துள்ளது.

கதர் உற்பத்திக்காகவும் ரூ. 5-இலட்சம் கடனுக அளிக்கப்பட் டிருக்கிறது.

சென்னை சட்டசபைத் தேர்தல்

கட்சிகள் நிலவரம்

சென்னை, மார்ச் 14—

சென்னை சட்டசபைக்கு இது வரையில் 164 இடங்களுக்குமுடிவு கள் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கட்சி நிலவரங்கள் வருமாறு:—

தி. மு. கழகம்	7
பி. சோ.	2
சோஷலிஸ்டு	1
சுயேச்சை	13
கம்யூனிஸ்டு	2
பார்வர்டு பிளாக்	2
கா. சீ. க.	13
காங்கிரஸ்	124

பாராளுமன்றம்......

சென்னை, கரூர் பாராளுமன் றத் தொகுதியில் கழக அபேட் சகர் தோழர் இரா. செழியன் அவர்களைவிட சுமார் 30,000 - வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றிருக்கிறார். தோழர் செழியன் அவர்களுக்கு 73,135 வாக்குகளும், காங்கிரஸ் அபேட் சகருக்கு 1,05,399 வாக்கு களும் கிடைத்திருக்கின்றன. மற் றும் இரு சுயேச்சை அபேட்சகர் கள் தங்கள் டிபாசிட் தொகையை இழந்துவிட்டனர்.

சர்க்கார் மயமான தொழில்கள்

சர்க்கார் கடமை என்ன?

சென்னை, மார்ச் 13—

"இந்திய அரசாங்கம் தேசிய மயமாக்கியுள்ள தொழில்களைத் தனியாரிடம் மாற்றி, அதன் மூலம் கிடைக்கும் பணத்தை நாட்டின் பொருளாதார முன் னேற்றத்திற்குப் பயன்படுத்த லாம்" என்று உலகத்தின் மிகப் பெரிய பாங்கியான 'பாங்க் ஆப் அமெரிக்கா'வின் தலைவர் கூறி யுள்ளார்.

சில தொழில்களை ஆரம்பத்தில் அரசாங்கம் மேற்கொண்டு அத் தொழில் முன்னேற்றமடைந்த பின் அவற்றைத் தனியாரிடம் ஒப்படைத்துவிடுவது தங்கள் கடமையென்று சர்க்கார் கருத வேண்டுமென்றும் அவர் குறிப் பிட்டுவிட்டு, இது அனுபவத்தி னல் தமக்கு ஏற்பட்ட சொந்தக் கருத்தென்றும் கூறினர்.

சிங்கப்பூர் அரசியல் சீர்திருத்தத் திட்டங்கள்

இலண்டன், மார்ச் 13—

கடந்த ஆண்டு சிங்கப்பூருக்காக பிரிட்டன் தயாரித்த சில அரசி யல் சீர்திருத்தத் திட்டங்களை சிங்கப்பூர் பிரதிநிதிகள், சில திருத்தங்களுடன் ஏற்றுக் கொண்டுவிட்டதாக அறிவிக்கப் படுகிறது.

நிரந்தரமல்லவாம்— தற்காலிகமாகத்தானும்!

பெர்லின், மார்ச் 14—

கிழக்கு செர்மனியில் தற்காலிக மாக சோவியத் படைகளை வைத் துக்கொள்ள கிழக்கு செர்மனி யின் அயல்நாட்டு அமைச்சர் ரஷ்யத் தற்காப்பு அமைச்சருடன் ஒப்பந்தம் செய்துள்ளாராம்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ் செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகி றது. ஆசிரியர்: இரா. நெடுஞ் செழியன் எம்.ஏ.